## விலைகள், கூலிகள், தொழில்நிலை

### பொதுவான விலை மாற்றங்கள்

1992 ஆம் ஆண்டினை முழுமையாக நோக்குகையில் விலை அதிகரிப்புக் களின் சராசரி வீதம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிறிதளவு மிதமான தன்மையைக் காட்டியது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி அதிகரிப்பு வீதம் 1991 இன் 12.2 சதவீதம் கொண்ட உயர்வுடன் ஒப்பிடுகையில் 1992 இல் 11.4 சதவீதமாகக் காணப்பட்டது. எனினும், புள்ளிக் குப் புள்ளி அடிப்படையில் (1991 திசெம்பரை விட 1992 திசெம்பரில்) ஆண்டின் இறுதியில் சுட்டெண் 1991 ஆம் ஆண்டின் வளர்ச்சியான 9.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 13.8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து, 1992 இன் இறுதி மாதங்களின் விலைகளின் மிதமான உயர்வினைப் பிரதிபலித்தது. மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி 1991 இன் 9.2 சதவீதத் துடன் ஒப்பிடுகையில் 8.8 சதவீதத்தினால் மட்டும் உயர்வடைந்தமையின் மூலம், முதலாந்தரச் சந்தை மட்டங்களிலும் கூட விலையின் அதிகரிப்பு வீதங்களில் வீழ்ச்சிப் போக்கினைக் காண முடிந்தது.

1991 ஆம் ஆண்டிலிருந்து அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்பு வீதங் களில் ஏற்பட்ட வீழ்ச்சிப் போக்கு, 1992 இன் முதலரைப் பகுதியில் குறிப்பாக ஆண்டின் முதற் காலாண்டில் தெளிவாகக் காணப்பட்டது. கோதுமை மா, பாண், மண்ணெண்ணெய் போன்ற முக்கிய விடயங்களின் விலைகளில் ஏற்பட்ட உறுதியான தன்மையும் பெரும்போகத்தில் அரிசி, காய்கறி, செத்தல் மிளகாய் போன்ற இன்றியமையாதனவான உணவு விடயங்களின் திருந்திய வழங்கல் நிலைமையும் 1992 இன் முதற் காலாண்டில் விலைகளின் அழுத்தம் குறை வடைவதற்கு உதவிய முக்கிய காரணிகளாக விளங்கின.

1992 மேயிலிருந்து முக்கிய விடயங்களின் விலைகளின் போக்கில் ஒரு மாறுபட்ட தன்மை அவதானிக்கப்பட்டது. இவ் அபிவிருத்திக்கு பெரும்போகம் முடிவுறும் நிலைக்கு வந்துகொண்டிருந்தமை ஓரளவு காரணமாக இருந்ததுடன் இக்காலப் பகுதியில் மீண்டும் விலை அதிகரிப்புக்கள் காணப்படுவது வழமையான தாகும். இப்போக்கு, மேயில் பாதுகாப்பு வரி 1 சதவீதத்திலிருந்து 3 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டமையினால் மேலும் அழுத்தமடைந்து சீனி, பால்மா, மருந்துவகை போன்ற இன்றியமையாத சில விடயங்களின் விலைகளின்மீது தாக்கத்தை ஏற் படுத்திய ஒரு காரணியாக விளங்கியது.

ஆண்டின் இறுதி மாதங்கள் சிலவற்றில் ஆண்டுச் சராசரி விலை அதிகரிப்புக் களின் வீழ்ச்சிப் போக்கில் மீண்டுமொரு மாறுபட்ட தன்மை காணப்பட்டது. சிறுபோகத்தில் உணவுப் பண்டங்களின் உற்பத்தியின் மீது வரட்சியின் தாக்க மானது இந்த மாற்றத்திற்கான முதன்மைக் காரணமொன்றாக அமைந்தது. ஆண்டின் இறுதி மாதங்களில் முக்கிய பொருட்களின் விலைகளின் மேல்நோக்கிய போக்கின் விளைவாக 1992 ஒகத்தில் 10.4 சதவீதமாக விளங்கிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் பொதுவான ஆண்டுச் சராசரி மாற்றம் 1992 திசெம் பரில் 11.4 சதவீதத்திற்கு அதிகரித்தது.

கேள்விப் பக்கத்தில், 1992 இன் ஆரம்பத்தில் நாணயக் கூட்டுக்களின் வளர்ச்சி வீதத்தில் காணப்பட்ட அதிகரிப்பானது பொதுவான விலை மட்டத்தில் மேலும் தாக்கத்தினை உருவாக்குவதற்குக் காரணமாக அமைந்தது. திரவத் தன்மையினைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கி சந்தை அடிப்படையிலான வழிமுறைகளில் தங்கியிருந்தமையின் காரணமாக இவ்வாண்டில் கட்டுப்பாடு களைக் கொண்ட நாணயக் கொள்கை வழிமுறையொன்று தொடர்ந்தும் செயற் பாட்டில் இருந்தது. 1992 இன் நாணயக் கொள்கையின் முக்கிய அழுத்தமானது திறந்த சந்தை நடவடிக்கைகளின் மீதானதாக இருந்தது. இக்கொள்கை வழி முறைகள் இவ்வாண்டில் பணவீக்க வீதத்தைக் கட்டுப்படுத்த உதவின என்பதில் ஐயமில்லை.

**விலைகள்**

**நுகர்வோர் விலைகள்**

1992 இல் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (கொநுவிசு) ஆண்டுச் சராசரி 11.4 சதவீதத்தினால் அதிகரித்து 1991 இன் 12.2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் விலைகளின் அதிகரிப்பு வீதத்தில் சிறிதளவு வீழ்ச்சி யைப் பிரதிபலிப்பதாக இருந்தது. விலைத் தாக்கத்தின் மிதமான தன்மைக்கு, ஆடைகள், எரிபொருள் மற்றும் வெளிச்சம் என்பனவற்றின் மெதுவான அதிகரிப் புக்கள் காரணமாக அமைந்தன. 1992 இல் உணவுப் பொருட்களின் பொதுவான விலை அதிகரிப்பானது முன்னைய ஆண்டைப் போலவே இருந்த வேளையில் பல்வகைப் பொருட்களின் விலைகள் 1991 இனைவிட மிகக் கூடுதலாக அதிகரித் தன. ஆண்டின் இறுதி நான்கு மாத காலப் பகுதியில் விலைகளில் குறிப்பிடத் தக்க அதிகரித்துச் செல்லும் போக்கினை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இறுதி மாதத்தில் அதிகரிப்பானது குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டதோடு 1991 திசெம்பரின் 9.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1992 திசெம்பரில் சுட்டெண்ணில் 13.8 சதவீத புள்ளிக்குப் புள்ளி அதிகரிப்பை விளைவித்தது.


1991 இல் தொடங்கிய விலை அதிகரிப்பு வீதத்தின் வீழ்ச்சி 1992 இன் முதல் எட்டு மாதங்களிலும் தொடர்ந்ததெனினும் முழுமையான மட்டத்தில் அது தொடர்ந்தும் அதிகரித்தது. நுகர்வோர் விலைகளின் வளர்ச்சியானது குறிப்பாக ஆண்டின் இறுதியில் உணவு வகையின் அதிகரிப்புக்களினால் முக்கியமாக ஏற்பட்டதாகும். மொத்த அதிகரிப்பில் உணவுப் பொருட்ளின் விலைகளின் அதிகரிப்பானது 73 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்த வேளையில் ஆடைகள், எரிபொருளும் வெளிச்சமும் மற்றும் பல்வகை விடயங்கள் வகை என்பனவற்றின் பங்களிப்புக்கள் முறையே 3.3 சதவீதமாகவும், 2.7 சதவீதமாகவும், 21.0 சத வீதமாகவும் விளங்கின.

சுட்டெண்ணில் 61.9 சதவீத நிறையினைக் கொண்டிருக்கும் உணவுக் கான துணைச் சுட்டெண் 1992 இல் 11.9 சதவீதத்தினால் உயர்வடைந்தது. இந்த அதிகரிப்பானது 1991 இன் அதே அளவினதாகக் காணப்பட்டபோதிலும் 1992 இல் இது பெருமளவில் மாறுபடும் தன்மையினைக் காட்டியது. 1992 இன் முதற் சில மாதங்களில் அதனது வளர்ச்சி வீதம் 1991 இன் நேரிணையான காலப் பகுதியைவிடக் கணிசமான அளவு குறைவானதாகக் காணப்பட்டபோதும் 1992 இன் இரண்டாம் காலாண்டின் வளர்ச்சி வீதங்கள் உயர்வானதாகக்

# மொத்த விற்பனை விலைச் சுட்டெண்

1974 — 100

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி.

காணப்பட்டன. பருவகாலக் காரணிகள் ஆண்டின் முதலாம் மூன்றாம் காலாண்டு களில் விலை அதிகரிப்பினை மிதமாக்கின. எனினும், நாலாம் காலாண்டில் விலைகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து திசெம்பரில் உச்ச நிலையை எய்தின.

திசெம்பரில் இவ்வதிகரிப்பு வேகமானது, புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் 1991 திசெம்பரின் 9.0 சதவீதத்திலிருந்து 1992 திசெம்பரில் 13.8 சதவீதத்தை அடைந்தது. 1991 திசெம்பரிலிருந்து 1992 ஏப்பிரல் வரை நிலவிய நீண்ட கடும் வரட்சியானது பல உணவுப் பொருட்களின் உற்பத்தியில் பாதகமான எதிர் விளைவுகளைக் கொண்டிருந்ததோடு இதன் விளைவாக விலைகளிலும் தாக்கத் தினைக் கொண்டிருந்தது. சிறுபோக நெற்பயிர் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வெளியீடு கிட்டத்தட்ட 15 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஏறத்தாழ செத்தெம்பர் வரை தொடர்ந்து குறைந்த விலைகளைக் கொண்டிருந்த 1991 இனைப் போலன்றி பெப்புருவரி—ஏப்பிரல் காலப் பகுதியில் வீழ்ச்சியடைந்த அரிசி விலைகள் அதன் பின்னர் அதிகரிக்கத் தொடங்கின. எனவே இறக்குமதி களின் 60 சதவீத அதிகரிப்புக்களின் மத்தியிலும் 1992 இல் அரிசி விலைகள் கிட்டத்தட்ட 11 சதவீதத்தினால் உயர்வடைந்தன. நாலாம் காலாண்டின் தொடக்கத்தில் கோதுமை மாவின் நிருவகிக்கப்பட்ட விலைக் குறைப்பின் தாக்க மானது சுட்டெண்ணில் மிகச் சிறிய தாக்கத்தினையே கொண்டிருந்தது. 1992 இல் மொத்தத் தெங்கு உற்பத்தி அதிகரித்தபோதிலும் உலக சந்தையில் தேங்காய் எண்ணெய்க்கான அதிகூடிய விலையும் தெங்கு உள்ளீட்டுப் பொருட்களின் அதி கரித்த ஏற்றுமதிகளும் தேங்காய்கள், தேங்காய் எண்ணெய் என்பனவற்றின் விலைகள் உயர்வாக இருப்பதற்குக் காரணமாகின. மேலும், வெளியீட்டில் காலங் கடந்த தாக்கத்தினைக் கொண்டிருந்த வரட்சியின் தாக்கமானது ஆண்டின் இறுதி மாதங்கள் சிலவற்றில் தேங்காயின் அதி உயர் விலைகளில் பிரதிபலித்தது. வெங்காயம், மிளகாய் மற்றும் உருளைக்கிழங்கு என்பனவற்றின் சிறந்த அறு வடைகள் 1992 இல் அவற்றின் சராசரி விலைகளில் வீழ்ச்சிகள் பதிவு செய்யப் படுவதற்குக் காரணமாகின. எனினும், இந்த வீழ்ச்சிகள் பொதுவாக காய் கறிகள், மீன் என்பனவற்றின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களினால் பெரும் பாலும் எதிரீடு செய்யப்பட்டன. சீனி, பால் உணவுப் பொருட்கள் என்பனவற் றின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் உணவுத் துணைச் சுட்டெண்ணின் அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தது.

1992 இல் ஆடைகள், எரிபொருள் மற்றும் வெளிச்சத்துக்கான துணைச் சுட்டெண்களின் அதிகரிப்புக்கள் 1991 இனைவிட மிகக் குறைவானதாக இருந்த தன. 1992 இல் ஆடைக்கான துணைச் சுட்டெண்ணின் அதிகரிப்பானது 1991 இன் 11.2 சதவீத அதிகரிப்புக்கெதிராக 6.7 சதவீதமாக விளங்கியவேளையில், எரிபொருள் வெளிச்சத்துக்கான துணைச் சுட்டெண் 1991 இன் 16.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 3.6 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்தது. ஆண்டின் நடுப் பகுதியில் மின் தீர்வையில் எரிபொருள் கட்டணமொன்று விதிக்கப்பட்டபோதிலும் ஆகக் குறைந்த சில அளவுகளைவிடக் குறைவான மின் பாவனையைக் கொண்ட வீட்டுத்துறைக்கு இது பிரயோகிக்கப்படவில்லை, பொதுவாக இந்த மட்டத்திற்குக் குறைவாகவுள்ள நுகர்வுடைய குறைந்த வரு மானம் பெறும் பிரிவுகளின் மீதான விலைத் தாக்கத்தினையே கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அளவிடுகின்றமையினால் இந்தக் கட்டணமானது சுட்டெண்ணைப் பாதிக்கவில்லை. புள்ளிக்குப் புள்ளி அடிப்படையிலும் கூட 1992 திசெம்பரில் இந்தத் துணைச் சுட்டெண்களின் அதிகரிப்புக்கள் 1991 இன் நேரிணையான அதிகரிப்புக்களை விடக் குறைவானதாக இருந்தன.

அட்டவணை 1.35

**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (1952 = 100)**

| | சராசரி | | வருடாந்த சராசரி சதவீத மாற்றம் | | புள்ளிக்குப்புள்ளி சதவீதமாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | 1991 | 1992 | 1990 இற்கு மேலாக 1991 | 1991 இற்கு மேலாக 1992 | 1990 திசெம்பருக்கு மேலாக 1991 திசெம்பர் | 1991 திசெம்பருக்கு மேலாக 1992 திசெம்பர் |
| எல்லா விடயங்களும் ... | 1,131.5 | 1,260.4 | 12.2 | 11.4 | 9.0 | 13.8 |
| பண்ட வகைகளின்படி | | | | | | |
| உணவு ... | 1,220.3 | 1,366.0 | 11.9 | 11.9 | 9.4 | 14.6 |
| உடை ... | 678.4 | 723.6 | 11.2 | 6.7 | 9.3 | 5.1 |
| எரிபொருளும் வெளிச்சமும் ... | 2,252.5 | 2,334.3 | 16.5 | 3.6 | 4.9 | 3.2 |
| வாடகை ... | 109.8 | 109.8 | — | — | — | — |
| பல்வகை ... | 1,146.0 | 1,318.7 | 12.2 | 15.1 | 9.7 | 19.5 |

மூலங்கள்: குடிமதிப்பு புள்ளி விபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி.

1992 இல் பல்வகை விடயங்களுக்கான தொகுதித் துணைச் சுட்டெண்ணில் ஒப்பீட்டு அடிப்படையில் மிகக் கூடிய 15.1 சதவீத அதிகரிப்பு காணப்பட்டது. புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் பல்வகை விடயங்கள் தொகுதி 1991 திசெம்பரின் 9.7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1992 திசெம்பரில் 19.5 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. கலால் தீர்வைகள், பாதுகாப்புத் தீர்வை என்பன வற்றின் மேல் நோக்கிய திருத்தத்தின் ஓரளவு காரணமாக இந்த வகையில், வெறியக் குடிவகைகள் புகையிலை என்பனவற்றின் விலைகளில் கணிசமான விலை அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. வெற்றிலை, பாக்கு என்பனவற்றின் விலை மட்டங்களில் காணப்பட்ட பாரிய அதிகரிப்புக்களில் வரட்சியின் தாக்கம் உணரப்பட்டது.

**மொத்த விற்பனை விலைகள்**

1992 இல் விலைகளின் அதிகரிப்பு வீதத்தில் காணப்பட்ட வீழ்ச்சியானது முதலாந்தரச் சந்தை மட்டத்திலும் பிரதிபலிக்கப்பட்டதோடு மொத்த விற்பனை விலைச் சுட்டெண் 1991 இன் 9.2 சதவீத அதிகரிப்புக்கு எதிராக 1992 இல் 8.8 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைப் போலல்லாது மொத்த விற்பனை விலை மட்டத்தில் தெளிவான போக்கு எதுவும் நுட்பமாகப் புலப்படவில்லை. ஆண்டு முழுவதும் சுட்டெண்ணில் சிறிய தளம்பல்கள் ஏற்பட்டன. புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் 1992 திசெம்பரில் சுட்டெண் 8.0 சதவீதத்தினால் அதிகரித்தது. 1991 இன் நேரிணையான அதிகரிப்பானது சிறிதளவு உயர்வான 8.1 சதவீதமாக இருந்தது.

புடவைகள், காலணிகள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள் என்பன வற்றின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இரசாயனங்கள் மற்றும் இரசாயன உற்பத்திப் பொருட்கள், பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றின் விலைகளின் மெதுவான வளர்ச்சியும் 1992 இல், சுட்டெண்ணின் வளர்ச்சி வீதத்தினைக் கட்டுப்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்தன. எனினும், 1992 இல் உணவுத் துணைச் சுட்டெண்ணின் அதிகரிப்பானது உயர்வானதாக இருந்தது. 1991 இன் 8.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1992 இல் இது 10.9 சதவீதமாக இருந்தது. உலோக உற்பத்திப் பொருட்கள் மற்றும் பல்வகை உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றின் துணைச் சுட்டெண்களின் வளர்ச்சி வீதத்திலும் அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. உணவுத் துணைச் சுட்டெண்ணின் அதிகரிப்புக்கு நெல், தேங்காய், தேங்காயெண்ணெய், மரக்கறிகள், மீன் என்பனவற்றின் விலை அதிகரிப்புக்கள் பெருமளவு காரணமாயின. புடவைகள், காலணிகள் என்பனவற்றிற்கான துணைச் சுட்டெண்ணின் வீழ்ச்சிக்கான முக்கிய காரணம் பதனிடப்படாத பருத்தியின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியாகும்.

அட்டவணை 1.36

**மொத்த விற்பனை விலைச் சுட்டெண் (1974 = 100)**

| விடயம் | சாரசரி | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | | புள்ளிக்குப் புள்ளி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | 1991 | 1992 | 1990 இனைவிட 1991 | 1991 இனைவிட 1992 | 1990 திசெம்பரை விட 1991 திசெம்பரில் | 1991 திசெம்பரை விட 1992 திசெம்பரில் |
| பண்டவகைப்படி | | | | | | |
| எல்லா விடயங்களும் ... | 710.8 | 773.0 | 9.2 | 8.8 | 8.1 | 8.0 |
| உணவு ... | 649.1 | 720.0 | 8.3 | 10.9 | 9.9 | 8.4 |
| வெறிக் குடிவகைகள் ... | 776.4 | 886.7 | 16.1 | 14.2 | 14.4 | 18.1 |
| புடவை, காலணிகள் ... | 426.3 | 418.7 | 5.3 | — 1.8 | 3.4 | — 2.0 |
| தாள் உற்பத்திகள் ... | 747.4 | 704.9 | 3.4 | — 5.7 | — 1.7 | — 2.8 |
| இரசாயன, இரசாயன உற்பத்திகள் ... | 495.4 | 531.0 | 16.9 | 7.2 | 23.2 | 4.6 |
| பெற்றோலிய உற்பத்திகள் ... | 1,105.1 | 1,135.7 | 17.8 | 2.8 | — | 5.9 |
| உலோகமல்லா உற்பத்திகள் ... | 1,262.1 | 1,356.0 | 11.6 | 7.4 | 9.4 | 12.6 |
| உலோக உற்பத்திகள் ... | 566.5 | 588.4 | — 0.4 | 3.9 | 0.6 | 5.7 |
| போக்குவரத்து கருவிகள் ... | 568.4 | 623.2 | 12.5 | 9.6 | 6.4 | 13.9 |
| மின் கருவிகளும் வழங்கல்களும் ... | 600.3 | 603.3 | 12.7 | 0.5 | 13.6 | — 2.6 |
| பொறிகள் ... | 409.7 | 440.4 | 9.2 | 7.5 | 7.5 | 10.5 |
| எரிபொருளும் வெளிச்சமும் ... | 1,289.4 | 1,290.5 | 4.5 | 0.1 | 0.1 | — |
| பல்வகை ... | 1,214.8 | 1,323.2 | 4.1 | 8.9 | 3.4 | 11.0 |
| துறைவகைப்படி எண் I | | | | | | |
| உள்நாட்டு வகை ... | 660.5 | 697.3 | 11.9 | 5.6 | 6.0 | 8.3 |
| இறக்குமதி வகை ... | 614.3 | 634.4 | 6.1 | 3.3 | 6.0 | — 0.8 |
| ஏற்றுமதி வகை ... | 939.8 | 1,109.2 | 7.5 | 18.0 | 13.0 | 13.9 |
| துறைவகைப்படி எண் II | | | | | | |
| நுகர்வுப் பொருட்கள் ... | 688.5 | 760.7 | 9.1 | 10.5 | 9.7 | 8.7 |
| இடைநிலைப் பொருட்கள் ... | 781.1 | 807.4 | 9.4 | 3.4 | 3.1 | 4.9 |
| முதலீட்டுப் பொருட்கள் ... | 769.3 | 824.9 | 9.8 | 7.2 | 8.4 | 11.7 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

உள்நாட்டு வகைகளில் மிகவும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் கொண்டிருந்த 1991 இனைப் போலன்றி 1992 இல் ஏற்றுமதி வகைகளே அதிகூடிய அதிகரிப்புக்களைக் கொண்டிருந்தன என்பதைத் துறைவாரியான பகுப்பாய்வு காட்டுகின்றது. 1992 இல் ஏற்றுமதித் தொகுதியின் அதிகரிப்பானது 18 சதவீதமாக இருந்தவேளையில் 1991 இல் இந்தத் தொகுதியின் அதிகரிப்பு 7.5 சதவீதமாக மட்டுமே இருந்தது. இந்த விரிவாக்கத்திற்கு இறப்பர், தேங்காயெண்ணெய் மற்றும் சில கறி வாசனைப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே முதன்மைக் காரணமாக அமைந்தது. உள்நாட்டுத் தொகுதி (5.6 சதவீதம்) இறக்குமதித் தொகுதி (3.3 சதவீதம்) ஆகிய இரண்டும் 1992 இல் 1991 இனை விடக் குறைவான வளர்ச்சி வீதங்களைக் கொண்டிருந்தன. 1991 இல் இவ் அதிகரிப்புக்கள் முறையே 11.9 சதவீதமாகவும் 6.1 சதவீதமாகவும் விளங்கின.

முடிவுப் பயன்பாட்டுப் பகுப்பாய்வில் 1992 இல் நுகர்வுப் பொருட்களின் துணைச் சுட்டெண் 10.5 சதவீத அதிகூடிய அதிகரிப்பினைப் பதிவு செய்தது. உணவு மற்றும் வெறியக் குடிவகைகளின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களே இதற்குப் பெருமளவு காரணமாக அமைந்தன. இடைநிலைப் பொருட்களின் வகைகளின், விலை விரிவாக்க வீதமானது 1991 இன் 9.4 சதவீதத்திலிருந்து 1992 இல் 3.4 சதவீதத்திற்குக் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. முதலீட்டுப் பொருட்கள் வகையிலும் கூட விலை அதிகரிப்பு வீதங்கள் வீழ்ச்சியடைந்ததுடன் இத் துணைச் சுட்டெண் 1991 இன் 9.8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1992 இல் 7.2 சதவீதத்தினால் விரிவடைந்தது.

**கூலிகள்**

1992 இல், கூலி வீதச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு அரசதுறை ஊழியர்களின் கூலிகளின் வளர்ச்சியானது 1991 இனைவிட மெதுவானதாக இருந்தது. உண்மையில், விலை அதிகரிப்புக்களை ஈடுசெய்வதற்குக் கூலி அதிகரிப்புக்கள் போதுமானதாகக் காணப்படாததுடன் அரசதுறையின் அனைத்து முக்கிய வகைகளினதும் உண்மைக் கூலிகளில் தேய்வும் பதிவு செய்யப்பட்டுள்ளது. நன்கமைந்த தனியார் துறையின் கூலி அதிகரிப்புக்கள் அரசதுறை ஊழியர்களின் அதிகரிப்புக்களை விடக் கூடுதலாகக் காணப்பட்டன. கூலி நிர்ணயச் சபையின் கீழ்வரும் வர்த்தகங்களில் உள்ள ஊழியர்களுக்கான உண்மைக் கூலி மட்டத்தில் மொத்த அதிகரிப்பொன்று பதிவு செய்யப்பட்டது.

**அரசதுறை**

ஆரம்ப திரட்டிய மாதச் சம்பளம் ரூ. 3,000 இற்குக் குறைவான அனைத்து அரசதுறை ஊழியர்களுக்கும் 1992 சனவரியிலிருந்து பயனுறும் வகையில் ரூ. 100 சிறப்புப் படியொன்று வழங்கப்பட்டது. 1990 நவெம்பரிலிருந்து மாறாது நிலையாகக் காணப்பட்ட அரச ஊழியர்களுக்குமான கூலி வீதச் சுட்டெண்ணில் இது சிறிய அதிகரிப்பொன்றை விளைவித்தது. 1991 இன் 12.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1992 இல் அனைத்து மத்திய அரச ஊழியர்களுக்கான மொத்தப் பெயரளவுக் கூலிகள் 1992 இல் 4.3 சதவீதத்தினால் அதிகரித்தன. 1992 இல் மத்திய அரச ஊழியர்களின் உண்மைக் கூலிச் சுட்டெண் 6.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் 1991 இல் உண்மைக் கூலிச் சுட்டெண் மாறாது காணப்பட்டது. 1992 இல் அரச பள்ளிக்கூட ஆசிரியர்களின் பெயரளவுக் கூலிச் சுட்டெண் 3.8 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் உண்மைக் கூலி வீதச்

### அட்டவணை 1.37

### கூலிவீதச் சுட்டெண்கள்

(1978 திசெம்பர்=100)

| | 1991 | | 1992 | | 1991 இனைவிட 1992இல் சதவீதமாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | பெயரளவு கூலிவீதச் சுட்டெண் | உண்மைக் கூலிவீதச் சுட்டெண் | பெயரளவு கூலிவீதச் சுட்டெண் | உண்மைக் கூலிவீதச் சுட்டெண் | பெயரளவு கூலிவீதச் சுட்டெண் | உண்மைக் கூலிவீதச் சுட்டெண் |
| **1. அரச ஊழியர்கள்** | | | | | | |
| i எல்லா நிறைவேற்றுத் தரமல்லா அலுவலர்கள் | 488.2 | 103.3 | 507.2 | 96.4 | 3.9 | — 6.7 |
| ii சிற்றூழியர்கள் ... | 582.3 | 123.3 | 609.9 | 115.9 | 4.7 | — 6.0 |
| iii எல்லா மத்திய அரச ஊழியர்கள் ... | 534.6 | 113.2 | 557.6 | 106.0 | 4.3 | — 6.4 |
| iv பள்ளிக்கூட ஆசிரியர்கள் ... | 444.8 | 94.2 | 461.8 | 87.8 | 3.8 | — 6.8 |
| **2. கூலி நிர்ணய சபை வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள்** | | | | | | |
| i வேளாண்மைத் தொழிலாளர்கள் ... | 577.7 | 122.2 | 664.6 | 126.1 | 14.9 | 3.2 |
| ii கைத்தொழில் வர்த்தக தொழிலாளர்கள் ... | 459.6 | 97.1 | 510.8 | 97.1 | 11.1 | — |
| iii பணிகள் தொழிலாளர்கள் ... | 336.5 | 71.1 | 365.9 | 69.6 | 8.7 | – 2.1 |
| iv கூலி நிர்ணயசபை வர்த்தகத் தொழிலாளர்கள்... | 518.8 | 109.7 | 590.0 | 112.0 | 13.7 | 2.1 |

மூலங்கள் : தொழிற்றிணைக்களம், இலங்கை மத்திய வங்கி.


சுட்டெண் 6.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1991 இற்கான நேரிணையான எண்தொகைகள் பெயரளவுக் கூலி வீதச் சுட்டெண்ணில் 10 சதவீத அதிகரிப்பும் உண்மைக் கூலி வீதச் சுட்டெண்ணில் 1.9 சதவீத வீழ்ச்சியுமாகும்.

அரசதுறை ஊழியர்கள் தொடர்பான தரவுகளின் பகுப்பொன்று நிறைவேற்றுத்துறையல்லா ஊழியர்களைவிட (3.9 சதவீதம்) சிற்றூழியர் வகையினர் தமது பெயரளவுக் கூலிகளில் (4.7 சதவீதம்) சிறிதளவு கூடிய அதிகரிப்பைக் கொண்டிருந்ததைக் காட்டுகின்றது. இதன் விளைவாக நிறைவேற்றுத்துறையல்லா ஊழியர்களின் 6.7 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் சிற்றூழியர் வகையினரின் உண்மைக் கூலிகளின் தேய்வு 6.0 சதவீதமாக விளங்கியது. 1991 இல் நிறைவேற்றுத்துறையல்லா ஊழியர்களின் உண்மைக் கூலிகள் 1.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் சிற்றூழியர்களின் உண்மைக் கூலிச் சுட்டெண் 1.2 சதவீதத்தினால் அதிகரித்தது.

## கூலி வீதச் சுட்டெண்கள்

1978 திசெம்பர் = 100

காலாண்டுதோறும்




இலங்கை மத்திய வங்கி.

**நன்கமைந்த தனியார்துறை**

1992 இல் கூலி நிர்ணயச் சபைகளுக்குட்பட்ட வர்த்தகங்களை உள்ளடக்கிய நன்கமைந்த தனியார்துறையில் கூலி நிர்ணயச் சபைகளின் கீழான பலதரப்பட்ட வர்த்தகங்களுக்குப் பிரயோகிக்கப்படும் ஆகக் குறைந்த கூலி வீதங்கள் அதிகரிக்கப் பட்டன. செயற்பாட்டிற்குட்படுத்தப்பட்ட முக்கிய வர்த்தகங்களாவன ஆடை தயாரிப்பு, தெங்கு தயாரிப்பு, பத்திரிகை எழுத்துத்துறை, அச்சிடலும் தோல் பதனிடலும், காலணிகள் மற்றும் தோல் பொருட்களைத் தயாரிக்கும் வர்த்தகங் கள் என்பனவாகும்.

கூலி நிர்ணயச் சபைக்குட்பட்ட அனைத்து வர்த்தகங்களுக்குமான பொது வான கூலிகள் 1991 இன் 14.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1992 இல் 13.7 சதவீதத்தினால் உயர்வடைந்தன. 1992 இல் விலை மட்டங்களின் சிறிய அதிகரிப்பின் விளைவாக 1991 இன் 2.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1992 இல் பொதுவான உண்மைக் கூலிச் சுட்டெண் 2.1 சதவீதத்தினால் உயர் வடைந்தது. எனினும், கூலி நிர்ணயச் சபைகளின் கீழான முக்கிய கைத்தொழில் வகைகளில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் தென்பட்டன. 1991 இல் கைத் தொழில், வர்த்தகம் என்பனவற்றின் தொழிலாளர் வகையினரும் பாதுகாப்புப் படைகளில் உள்ள தொழிலாளர்களும் தமது உண்மைக் கூலிகளில் அதிகரிப்புக் களைக் கண்ட வேளையில் வேளாண்மைத் தொழிலாளர்கள் சிறிதளவு வீழ்ச்சி யைக் கண்டனர். எனினும், 1992 இல் வேளாண்மைத் தொழிலாளர்கள் தமது உண்மைக் கூலிகளில் 3.2 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருக்கையில் கைத் தொழில் மற்றும் வர்த்தகம் என்பனவற்றின் தொழிலாளர்களின் உண்மைக் கூலிகள் மாறாது காணப்பட்டன. மாறாக, 1992 இல் பணிகளில் உள்ள தொழிலாளர்கள் தமது உண்மைக் கூலிகளில் 2.1 சதவீத வீழ்ச்சியை எதிர் நோக்கினர்.

**தொழில் நிலை**

தற்காலிக மதிப்பீடுகளின்படி, 1992 இல், நன்கமைந்த மற்றும் முறைசாரா தனியார்துறை இரண்டிலும் தொழில்நிலை குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைப் பதிவு செய்த வேளையில் அரசதுறையின் தொழில்நிலை தொடர்ந்து வீழ்ச்சி யடைந்தது.

அரசதுறையினதும் அரசுசார் நிறுவனங்களினதும் தொழில்நிலைகளை உள் ளடக்கிய அரசதுறைத் தொழில் நிலை மதிப்பீடுகள் மத்திய வங்கியினால் நடாத் தப்படும் அளவீட்டின் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அமைந் தவையாகும். அரசதுறை தொழில்நிலை மீது அவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் திறைசேரியின் ஆண்டுத் தொழில் நிலை மதிப்பீடுகளுடன் மேலும் இணக்கம் காணப்பட்டுள்ளன. தற்காலிக மதிப்பீடுகளின்படி 1992 இறுதியில் அரசதுறையின் மொத்தத் தொழில் நிலை 1,288,337 என மதிப்பிடப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டைவிட 1.4 சதவீத வீழ்ச்சியாகும். 1991 இல் அரசதுறையின் மொத்தத் தொழில் நிலை 3.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இது ஓரளவிற்கு அரச நிறுவனங்கள் தனியார்மயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் காரணமாக ஏற்பட்டதாகும். மத்திய அரசின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாகாண அரசாங்கங்கள் உள்ளூராட்சித் துணைத்துறைகள் என்பன வற்றின் ஊழியர்களை உள்ளடக்கிய அரச நிறுவனங்களின் தொழில்நிலை 1992 இன் இறுதியில் 653,959 என மதிப்பிடப்பட்டுள்ளதோடு 1991 இனைவிடச்

சிறிதளவான 0.2 சதவீத அதிகரிப்பையும் பதிவு செய்துள்ளது. இந்த அதிகரிப்பானது தகைமைத் தொழிலாளர், தொழில்நுட்பம் மற்றும் தொடர்புடைய தொழிலாளர் வகையிலும் குறிப்பாக ஆசிரியர்கள் துணைத் துறையிலும் பெருமளவு பிரதிபலிக்கப்பட்டது. அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள், அரசுடைமையாக்கப்பட்ட வர்த்தக முயற்சிகள், அரச வங்கிகள் என்பனவற்றை உள்ளடக்கிய அரசுசார்துறையின் தொழில்நிலை முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட போக்கினைத் தொடரும் விதத்தில் 1991 இனைவிட 3.1 சதவீத வீழ்ச்சியினைப் பதிவு செய்தது.

கடந்த ஆண்டில் அரசதுறையின் தனிப்பெரும் ஊழியர் தொகுதியாக விளங்கிய உடலுழைப்புத் தொழிலாளர் வகையில் தொழிலில் ஈடுபட்டிருந்தோரின் எண்ணிக்கை 1992 இல், இத் துறையின் மொத்தத் தொழில் நிலையில் 38.3 சதவீதத்திற்கு வகைகூறி 1.5 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. 1992 இல் தகைமைத் தொழிலாளர், தொழில்நுட்பமும் அதனோடு தொடர்புடையதுமான வேலையாட்களின் எண்ணிக்கை 256,526 என மதிப்பிடப்பட்டதோடு இது அரச துறையின் மொத்தத் தொழில்நிலையில் 19.9 சதவீதத்திற்கு வகைகூறியது. இந்த வகையின் தொழில் நிலையானது, 1991 இன் 6 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 1992 இல் 3.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வகையில் பெரும்பாலும் 69 சதவீதமானோர் ஆசிரியர்களாகக் காணப்பட்டவேளையில் இன்னுமொரு 12 சதவீதம் வைத்தியர்கள், தாதிமார் மற்றும் ஏனைய நலத்துறை ஆளணியினர் ஆகியோரைக் கொண்டிருந்தது. 1992 இல், ஆசிரியர்கள் தாதிமார்கள் மற்றும் ஏனைய நலத்துறை ஆளணியினரின் ஆட்சேர்ப்பு தகைமைத் தொழில், தொழில்நுட்பம் அதனோடு தொடர்புடையதுமான வகையில் தொழிலில் ஈடுபட்டவர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்த முக்கிய காரணியாக விளங்கியது. 1992 இல் அரச துறையில் எழுதுவினைஞர் மற்றும் அதனோடு தொடர்புடைய வேலையாட்கள் 198,958 என மதிப்பிடப்பட்டுள்ளதோடு இவ்வாண்டில் 1.8 சதவீத வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. இதேவேளையில் 243,244 என மதிப்பிடப்பட்டுள்ள பணி வேலையாட்கள் வகையும் 4 சதவீத வீழ்ச்சியைக் கொண்டிருந்தது.

தனியார்துறைத் தொழில் நிலையில் காலத் தொடர் தரவுகள் இல்லாமையின் காரணமாக நன்கமைந்த தனியார் துறையின் தொழில்நிலை மட்டத்தினை மதிப்பிடுவதற்காகச் சேமநிதியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஊழியர்கள் எண்ணிக்கை போன்ற ஏனைய குறிகாட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. ஊழியர் சேமநிதியத்தில் தொழிற்படும் கணக்குகளின் எண்ணிக்கை 1990 இன் 1,267,835 இலிருந்து 1991 இல் 1,341,086 இற்கு அதிகரித்து 5 சதவீத அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. ஒப்புதலளிக்கப்பட்ட சேமநிதியங்களில் மொத்தத் தனியார் துறைத் தொழில்நிலை, 1992 இல், முன்னைய ஆண்டைவிட 10 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, 1992 இல் நன்கமைந்த தனியார்துறைத் தொழில் நிலையில் நியாயமான வளர்ச்சியொன்று காணப்பட்டதெனினும் 1991 இன் பெறுபேறுகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்கதொன்றாக இருக்கவில்லை.

இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் (முன்னைய கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு) தொழிற்படும் தொழில் முயற்சிகளின் தொழில்நிலை 1992 இல் தொடர்ந்து விரிவடைந்தது. 1992 இறுதியில் இந்தத் தொழில் முயற்சிகளில் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 104,220 ஆக அமைந்து

1991 இனைவிட 22 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. இந்தத் தொழில் முயற்சிகளில் கிட்டத்தட்ட 50 சதவீதமான தொழில்நிலை கட்டுநாயக்கா ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தினுள் காணப்பட்டதுடன் இவற்றில் 80 செயற் றிட்டங்கள் 1992 இல் தொழிற்பட்டுக் கொண்டிருந்தன. 1991 நடுப்பகுதியில் தொழிற்பாட்டைத் தொடங்கிய கொக்கல ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் 1992 இல் 3,474 ஆட்களுக்குத் தொழில்வாய்ப்புக்களை வழங்கியது.

அரசின் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் ஊடாகச் சுயதொழில்—வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டமை முறைசாராத்துறையின் தொழில் நிலைக்கான பயன்மிக்க குறிகாட்டியாக விளங்கியது. வருவாய் உருவாக்க நடவடிக்கைகளுக் காகக் கடன் திட்டங்களின் கீழ்த் தொடர்ந்து கடன் வசதிகள் வழங்கப்பட்டன. சனசக்தியின் முதலாவது இரண்டாவது சுற்றுக்களின் கீழ் 1992 இறுதியில் 159,224 ஆட்கள் வருவாய் உருவாக்க நடவடிக்கைகளில் தம்மைத் திறமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1992 இல், நாட்டில் தொழில்வாய்ப்பின்மை நிலையினை இலகுபடுத்துவதில் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்கள் தொடர்ந்தும் உதவின. இலங்கை வெளி நாட்டுத் தொழில் வாய்ப்புப் பணியகத்தினால் நடாத்தப்பட்ட விமான நிலைய அளவீடு ஒன்று, உரிமம் வழங்கப்பட்ட முகவராண்மைகளினூடாகவும் இலங்கை வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புப் பணியகத்தினூடாகவும் 1991 இன் 65,007 ஆட்களுக்கு எதிராக 1992 இல் 124,494 ஆட்கள் வெளிநாட்டில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளமையை வெளிப்படுத்தியது. உரிமம் பெற்ற முகவ ராண்மைகள் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் பணியகம் என்பவற்றைவிடத் தனியார் வழிப்படுத்தலின் ஊடாக அதிகூடிய எண்ணிக்கை யைக் கொண்ட ஆட்கள் வெளிநாட்டில் தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளுவதனையும் கருத்திற் கொள்கையில் வெளிநாட்டில் தொழில்வாய்ப்புக் களைப் பெற்றுக்கொள்வோரின் உண்மையான எண்ணிக்கை இதைவிடக் கூடுத் லாக இருக்கலாம். உரிமம் பெற்ற முகவராண்மைகளினூடாகவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பணியகத்தினூடாகவும் வெளிநாட்டில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வோரின் எண்ணிக்கை வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவோர்களின் மொத்த எண்ணிக்கையில் கிட்டத்தட்ட அரைப் பங்கேயாகும் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.